## இயல் 7.2 - அளவைகள்

பயிற்சி எண் :: 7.2.3.4.I


அளவைகள் - பாடச்சுருக்கம் - தநாஅபு - பயிற்சி 2.4

## அளவைகள் - பாடச்சுருக்கம் - தநாஅபு - பயிற்சி 2.4

1. எதிர்ப்பக்கங்கள் இணையாகவும், சமமாகவும் உள்ள நான்கு பக்கங்கள் கொண்ட ஒரு மூடிய வடிவம் இணைகரம் எனப்படும்.


(i) சரி ✓ (ii) தவறு

இணைகரத்தில், $\overline{AB} \parallel \overline{CD}$ மற்றும் $\overline{BC} \parallel \overline{DA}$.
அதுபோல, $\overline{AB} = \overline{CD}$ மற்றும் $\overline{BC} = \overline{DA}$.




2. இணைகரத்தின் பரப்பளவு = $b \times h$ ச.அலகுகள், இங்கு $b$ = அடிப்பக்கம்; $h$ = உயரம்.


(i) தவறு (ii) சரி ✓




3. ஓர் இணைகரத்தில் அனைத்துப் பக்கங்களும் சமமாக இருந்தால் அது சாய்சதுரம் எனப்படும்.


(i) சரி ✓ (ii) தவறு

சாய்சதுரத்தில், $\overline{AB} \parallel \overline{CD}$, $\overline{BC} \parallel \overline{DA}$.
மேலும், $\overline{AB} = \overline{BC} = \overline{CD} = \overline{DA}$.




4. சாய்சதுரத்தின் பரப்பளவு = $\frac{1}{2} \times d_1 \times d_2$ ச.அலகுகள். இங்கு $d_1$, $d_2$ என்பன மூலைவிட்டங்கள்.


(i) தவறு (ii) சரி ✓




5. ஓர் இணைகரத்தில் ஒரு சோடி இணையில்லாத பக்கங்கள் இருப்பின் அது ஒரு சரிவகம் எனப்படும்.


(i) சரி ✓ (ii) தவறு

சரிவகத்தில், $\overline{AB} \parallel \overline{CD}$. ஆனால், $\overline{BC} \nparallel \overline{DA}$




6. சரிவகத்தின் பரப்பளவு = $\frac{1}{2} \times h \times (a + b)$ ச.அலகுகள். இங்கு $a$, $b$ ஆகியவை இணைப்பக்கங்கள் மற்றும் $h$ என்பது உயரம் ஆகும்.


(i) தவறு (ii) சரி ✓




7. சரிவகத்தின் இணையற்ற பக்கங்கள் சமமாக இருப்பின், அது ஓர் இருசமபக்கச் சரிவகம் எனப்படும்.

(i) சரி ✓ (ii) தவறு

இருசமபக்கச் சரிவகத்தில், $\overline{BC} \nparallel \overline{DA}$.
ஆனால், $\overline{BC} = \overline{DA}$.





## Information Rights & Disclaimers

Sum & solution prepared on Tuesday 19th July, 2022 :: 18:59 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, presentation style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.
https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.